(3) PERSONAL EXPLANATON *re* STATEMENT OF THE HON. THE MINISTER FOR FINANCE DURING THE HALF-HOUR DEBATE ON 10TH MAY 1954. *re* STATIONING OF SPECIAL ARMED POLICE IN TANJORE DISTRICT.

SRI M. KALYANASUNDRAM :—" Sir, I rise on a point of personal explanation. " கனம் சபாநாயகர் அவர்களே, தஞ்சாவூர் ஜில்லாவில் **Special Armed Police** வைத்திருப்பது குறித்து நேற்று நடந்த விவாதத்திற்கு கனம் மந்திரி அவர்கள் பத்து நிமிஷம் பதில் கூறினார். அதிலே ஒன்பது நிமிஷம் கட்சி பிரசாரத்தைப்பற்றி பேசினார். இந்த ஒரு நிமிஷம் தான் சொன்னார்கள். வள்ளுவக்குடி சம்மந்தப்பட்ட வரையில் என்னென்ன குற்றச்சாட்டுகள் எழுதி அனுப்பினார்கள். விசாரணைக்கு என்னென்ன எடுக்கப்பட்டிருக்கின்றன. என்பதை விளக்க வேண்டும். நேற்று சொல்லும் காலத்தில் இது பரிசீலனைக்கு வரும் என்று நினைத்தோ அது இதுவரையிலும் வருவதாயில்லை. ஆனால் குற்றச்சாட்டை இன்றைக்கு அறிவிக்கப்பட்டுள்ள முறையில் சொன்னார்கள். அன்றைய தினம் என்னென்ன குற்றச்சாட்டுகள் கலெக்டரிடம் வந்தது. என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள். குறிப்பாக என்னென்ன எழுதி இருக்கிறார்கள் என்பதுமல்லாமல், அங்கத்தினர் ராமலிங்கம் மற்ற அங்கத்தினர்களும் இதைப்பற்றி என்ன எழுதி அனுப்பியுள்ளார்கள் என்பதையும் விளக்க வேண்டும்."

* THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, I did not make any mis-statement with reference to the petition or representation made by the hon. the Deputy Leader of the Opposition. I wanted instances of specific charges against the Police which could be enquired into. The communication sent to me referred to some incidents which happened with reference to the Collector. It was immediately forwarded to the Collector and action is being taken with reference to it. With reference to the Police, there was merely a general statement in the communication that there were Police excesses at Valluvakudi. No specific instances had been stated in that petition. Even now, I told the hon. the Deputy Leader of the Opposition when he pointed out this petition that unless specific instances are pointed out to me, it will not be possible to hold any enquiry on a general charge. Therefore, what I stated was quite correct and even now I say no instances of specific incidents have been brought to my notice."

IV.—HALF-HOUR DEBATE *RE* EMPLOYMENT OF EX-TRAMWAYMEN IN THE CITY TRANSPORT AND RESUMPTION OF MADRAS TRAMWAYS.

SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்
12-40 p.m. களே, டிராம்வேக்கள் நிறுத்தப்பட்டதினால் பொதுமக்களுக்கு பல விதமான தொந்தரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்தக் கம்பெனியில் வேலை செய்துக்கொண்டிருந்த தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்ட தினத்திலிருந்து மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி இருப்பதும், பொது மக்களும் மலிவான போக்குவரத்து சாதனமின்றி கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதும் எல்லோரும் அறிந்த விஷயம். இப்போது இந்த விஷயத்தை விவாதத்திற்கு எடுத்ததின் நோக்கங்களில் ஒன்று ஏழைத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதுதான். கனம் முதல் மந்திரி அவர்கள் இதைப்பற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதின்பேரில்தான் இந்த அரை மணி விவாதத்தை ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இதை அனுமதித்ததற்கு தங்களுக்கு வந்தனம் செய்ய கடமைப்பட்டுள்ளோம்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" The half-hour debate was conceded only in regard to the question whether the

tramway workers who had been thrown out of employment due to the closure of the tramways would be provided with jobs in the Madras City Transport. I want to know how the hon. Member is relevant in speaking in regard to the resumption of tramways which is an altogether different subject.''

SRI M. KALYANASUNDRAM :—'' டிராம்கள் மீண்டும் ஓடுவதைக் குறித்து இப்போது பேசுவது சரியா என்று கனம் மந்திரியார் கேட்கிறார். ஆனால் நேற்று இரண்டு கேள்விகள் பற்றி ராமலிங்கம் பிரேரித்து இரண்டையும் சேர்த்து ½ மணி நேரம் விவாதம் கேட்டார். அதையும் கொடுத்திருக்கிறார்கள்.''

MR. SPEAKER :—'' I allowed the debate in regard to two questions, viz., regarding employment of ex-tramway workers in the City Transport and resumption of tramway service. The Hon. Mr. Bhaktavatsalam, who is present here, is concerned with the portfolio of 'Labour'. The Hon. Mr. Parameswaran is concerned with the portfolio 'Transport'. I shall allow Mr. Kalyanasundram ten minutes. I shall allow Mr. Palaniyandi five minutes. I shall allow each of the Hon. Ministers, viz., Mr. Bhaktavatsalam and Mr. Parameswaran five minutes.''

SRI M. KALYANASUNDRAM :—'' கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டிராம்வே வண்டியானது ஏழைகளுக்கும், நடுத்தர மக்களுக்கும் ஒரு போக்குவரத்து சாதனமாக இருந்தது. மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால் தொழிலாளர்கள் மிகுந்த உற்சாகத்துடன் வேலை செய்யத் தயாராய் இருக்கிறார்கள். இடையூறுகளை அகற்ற வழி செய்வார்கள். இந்தத் தொழிலாளர்கள் முன்பு இருந்த முதலாளிகளை எதிர்த்ததில் நியாயம் இருந்தது. முன்பு இருந்த முதலாளிகளுக்கு இந்த சர்க்கார் விசேஷ சட்டமே கொண்டுவந்தது. அரசியல் சட்ட அடிப்படையை மாற்றி அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது தொழிலாளர் அதை எடுத்து நடத்துவதற்கு முன்வருகிறார்கள். அவர்கள் அப்படி முன்வரும்போது சர்க்கார் அதற்கு தக்கபடி உதவி யளித்தால் நலமாயிருக்கும்.

'' டிராம்வே தொழிலாளர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இன்று நல்ல பொறுப்பு வாய்ந்த மந்திரி சபை இருக்கிறது ; தொழிலாளர்களுக்கு மாற்றுவேலை கொடுப்பதற்கு விசேஷ ஏற்பாடுகள் செய்ய சில அதிகாரங்களை மத்திய சர்க்கார் கொடுத்தது எல்லோருக்கும் ஞாபகம் இருக்கும்.

'' டிராம்வே நிறுத்தப்பட்டதினால் பாதிக்கப்பட்ட தொழிலாளிகளுக்கு மோட்டார் டிரான்ஸ்போர்டில் வேலை கொடுப்பதாக வாக்குறுதியளித்தார்கள். இதை கனம் மந்திரி அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். அதில் பதினொரு பேருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு வேலை கொடுக்கப்படாததின் காரணம் என்ன ? டிராம்வே தொழிலாளர்கள் இன்னும் 135 பேர்கள் வேலைக்கு எடுக்கப்படவேண்டியவர்கள் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக சட்டசபையில் பல கேள்விகள் கேட்கப்பட்டன.

'' இந்தத் தொழிலாளர்கள் சேர்ந்து இவ்வளவு ஒற்றுமையாக வரும் காலத்தில் ஏன் சர்க்கார் அவர்களுக்கு இக்கம்பெனியை நடத்துவதற்கு அனுமதி தரக்கூடாது ? ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களில் 149 பேர்கள்தான் மாற்று வேலைக்கு தகுதியானவர்கள் என்று தீர்மானித்து 11 பேருக்குதான் **Bus Transport Department**-ல் வேலை கொடுக்கப்பட்டது. உண்மையில் அவர்களுக்கு எல்லாம் **Bus Transport Department**-ல் வேலை கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த சர்க்காருக்குக் கிடையாது.

" ஸ்பெஷல் பிராஞ்சைச் சேர்ந்த போலீஸ்காரர்கள் ஒவ்வொரு தொழிலாளர்களேயும் வீடு வீடாகத் தேடி, அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர், அவருடைய பூராவான வாழ்க்கை இவற்றைப்பற்றி விசாரணை செய்தார்கள். இந்த டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் தொழிலாளர்களை நியமிப்பதில் கட்சிக் கண்களோடு பார்க்கலாமா ? இவ்விதம் ஏழை தொழிலாளர்களிடையே பாரபட்சம் காட்டுவது நீதியா ? நேர்மையா ? வேலைக்கு எடுக்கப்பட்ட அந்த 11 தொழிலாளர்களும் ஒரே சங்கத்தைச் சேர்ந்தவர்கள். மாற்றுக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர் ஒருவர்கூட அமர்த்தப்படவில்லை. இது மாதிரியாக கட்சி மனப்பான்மையுடன் சர்க்கார் நடக்கக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் மந்திரி அவர்கள் மேற்சொன்ன விஷயங்களை யெல்லாம் கவனித்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.''

SRI M. PALANIYANDI :—" கனம் சபாநாயகர் அவர்களே ! டிராம்வே தொழிலாளர்கள் வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அவர்களைப் பஸ் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்டில் எடுத்துக் கொள்ளப்போவதாகக் கேள்வி நேரத்தில் போடப்பட்ட ஒரு கேள்விக்குக் கனம் மந்திரி அவர்கள் பதிலளித்தார். ஆனால் இப்பொழுது மந்திரியவர்கள் சொல்லுகிற பதிலைப் பார்த்தால் 146 பேர்கள் வேலைக்கு மனுப் போட்டிருக்கிறார்கள் என்றும் அதில் 11 பேருக்குத்தான் வேலை கொடுக்கப் பட்டது என்றும் சொல்லப்பட்டது. இந்த பதிலிலிருந்து என்ன தெரிகிறது ? இந்த சர்க்கார் அன்று வாக்குறுதி கொடுத்த பிரகாரம் காரியத்தை நிறைவேற்றியிருக்கிறதா ? வேலையில்லாமல் திண்டாடும் 146 பேர்களில் 11 தொழிலாளருக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டது. இது சரியா என்று கேட்கிறேன். அங்குள்ள ஸ்தானங்கள் காலி ஆகாததனால் கொடுக்கப்படவில்லையா அல்லது காலியாகியும் கொடுக்கவில்லையா ? என்ன காரணத்துக்காக இப்படி அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் தொழிலாளர்களின் அவல நிலையைப் போக்குவதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுவாக **employment exchange** பற்றிய பிரச்னைகள் எழுந்தன. இந்த **employment exchange** சரியானபடி இயங்குவதில்லை. இதனால் யாருக்கும் எந்தவிதமான நன்மையும் ஏற்படுவதில்லை. அப்படி இங்கிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பும் தொழிலாளர்களும் மற்ற இடங்களில் அமர்த்தப்படுவதில்லை. ஆகவே டிராம்வே கம்பெனி நிர்வாகத்தை தனிப்பட்ட முதலாளிகளின் கையில் ஒப்புவித்திருந்தாலுங்கூட இந்நேரம் இந்த தொழிலாளர்களுடைய பிரச்னை தீர்ந்திருக்கும். உதாரணமாக பஸ் டிரான்ஸ்போர்ட்டில் காலியாகும் ஸ்தானங்களுக்கு ஒரு சிலரை நியமித்துக் கொண்டு வந்திருந்தாலும்கூட கடந்த ஒரு ஆண்டில் அவர்களுடைய வேலையில்லாப் பிரச்னை ஒரு அளவு தீர்ந்திருக்கும். அதுதான் இல்லையென்றாலும் இப்போது கனம் முதல் மந்திரி வந்துள்ள காலத்தில் டிராம் கம்பெனியை சர்க்கார் ஏற்று நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. அப்படி ஓடினால் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் ஒரு பெரிய வசதி கிடைக்கும். மேலும் இதைப்பற்றி நான் ஒரு கேள்வி கேட்டது நிராகரிக்கப்பட்டது.

" இப்போது டிராம்வே தொழிலாளர்கள் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். இன்று முதல் மந்திரியாக இருக்கும் காமராஜ நாடார் வந்துள்ள காலத்தில் கனம் பக்தவத்சலம் தொழில் மந்திரியாக வந்துள்ளார். இவர்கள் மூலம் இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. மற்றும் சர்க்கார் பணம் கொடுக்க வசதியில்லை என்று சொன்னாலும் தொழிலாளர்கள் கொடுத்துதவுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். இதைக் கொடுப்பதில் நஷ்டம் ஏற்பட்டுவிடாது. லாபகரமாகவே இருக்கும். ஆதலால் சர்க்கார் அனுமதி கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படி இதை ஏற்று நடத்தினால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்கும். ஒருவேளை டிராம்வேயை சர்க்கார் ஏற்று நடத்தினால் தொழிலாளர்களிடையே சில தகராறுகள் ஏற்படும் என்று அரசாங்கம் கருதலாம். அப்படி ஒன்றும் நேருவதற்கில்லை. தொழிலாளர் சங்கங்களில் இரண்டு சங்கங்கள்தான் இருக்கின்றன. அந்த தொழில்

11th May 1954] [Sri M. Palaniyandi]

சங்கத்தை கம்யூனிஸ்டுகள் நடத்தவில்லை. தொழில் சங்கத் தலைவர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்த தோழர் வெங்கடராமன். அவர் இப்போது பார்லிமெண்டு மெம்பராக இருக்கிறார். இவர் தொழில் துறையில் மிக்க அனுபவம் உள்ளவர். தொழிலாளர்களை ஒன்று சேர்த்து நிர்வகிக்கும் திறமை வாய்ந்தவர். ஆகையால் உடனடியாக எவ்விதத் தயக்கமும் இல்லாமல் கனம் முதல் மந்திரி காமராஜரும் தொழில் மந்திரி கனம் பக்தவத்சலம் அவர்களும் அவர்களுக்கு உதவி செய்து மீண்டும் சென்னை நகரத்திலே டிராம் ஓடுவதற்கான வகை செய்ய வேண்டுமென்றும், அது ஏழைகளுக்கும் நடுத்தரவகுப்பினருக்கும் போக்குவரவு சாதனமாக இருக்கும் என்றும் சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Mr. Speaker, Sir, I would like to refer to some of the remarks of hon. Members about the possible revival of the tramways. My Hon. Colleague will reply regarding the re-employment in the City Transport of these poor workers who have been thrown out of employment on account of the closure of the tramways. There is also the other aspect of providing cheap transport for the middle and the poorer classes of people in the City. 12-50 p.m.

" There are two ways by which the tramways could be revived. One is that Government themselves should take over the tramway and run it as a nationalised concern. From the papers I have with me it is seen that Government have already examined this question three years ago. Government examined this question by appointing a committee of experts to go into the whole question of whether it would be feasible for Government to take over tramways and run is as a nationalised concern. They have been advised that it would *not* be an economical proposition for Government to take over the tramways and run it themselves. Whatever may be the price, whatever may be the terms of acquisition that could be settled, Government have been advised not to take over the tramways.

" There is the other aspect of people having business interests or the workers themselves can come forward to run the tramways and Government can give them all possible help and encouragement and enable them to run the tramways. It is only in that spirit that the Hon. the Chief Minister has been examining the ways and means of reviving the tramways ever since he took up office."

SRI M. KALYANASUNDRAM :—" If the workers come forward to run the tramways, will the Government give them sufficient financial assistance and will they also defer the question of payment to the employer of the cost of the machinery to a convenient date? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I will certainly have that suggestion examined and I shall try to do whatever I can to enable the workers to take the tramways themselves and run it."

SRI V. BALAKRISHNAN :—" What is meant by the expression ' economical proposition '? Does it mean that it will not yield even the 3 per cent return? "

* THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Yes, Sir. Government have been advised so far as the tramways are concerned that it would not be an economical proposition for them to take over the tramways. With such opinion, Government will not be well advised in taking over the tramways. A second suggestion had been made that the discharged workers should be given suitable employment in the City Transport and other Government concerns. The former Minister in charge of Industries and Labour gave an assurance that the Government City Transport and other Government factories would take over these discharged workers as far as it was possible. I find from the papers that my Colleague in charge of Transport is having, that even some of the ex-tramway workers who had been selected for jobs had not yet turned up for duty. The hon. Member, Mr. Palaniyandi, referred to the ineffective manner in which the Employment Exchanges have been helping these poor workers to get employment. I shall look into the matter. So far as the Labour department is concerned I can give this much of assurance to the House, viz., that I shall have the matter fully examined and I shall see to what extent I could get employment for these poor people who have been thrown out of employment due to the closure of the tramways."

THE HON. SRI B. PARAMESWARAN :—" Mr. Speaker, Sir, as suggested by my Colleague, the Hon. Minister for Labour, I would throw some light upon the question that is being discussed to-day, viz., how far the City Transport had been helpful in giving employment to the ex-tramway workers. That is the point with which I am concerned. In 1953–54, Government allotted Rs. 15 lakhs for the acquisition of new buses. Thirty-five new buses were acquired during the course of the year. Before these buses were acquired, the tramways ceased to operate in the Madras City from 12th April 1953. On 3rd July 1953 Government passed an order by which it was laid down that ex-tramway workers could be appointed against the vacancies of conductors, checking inspectors and so on, in the new buses that had to be put on the road to cope up with the increased traffic due to the closure of the tramways. It was also ordered that such of those workers who had bad a good record of service should be appointed. It was ordered that the applicants should be interviewed by a committee consisting of the Joint Transport Commissioner, Deputy Commissioner of Police (Traffic and Licensing), Assistant Transport Commissioner and Mechanical Engineer, with regard to their past experience, record of service, qualifications, character and physical fitness. Consequent on the partition of the State it was ordered that posts like cleaners, checking inspectors, etc., in the City Transport could be filled by suitable ex-tramway men. Applications were received accordingly by the Transport Commissioner and the last

11th May 1954] [Sri B. Parameswaran]

date was 15th of December 1953. All ex-tramway men will not be suitable for holding corresponding posts in the Transport department as the nature of duties and qualifications vary in certain cases. For example, the driver of a tram cannot be employed as a driver of the City Transport since the latter requires a valid driving licence and sufficient experience in driving. Fitters of the tramways cannot be taken as fitters of the City Transport since the former has got experience only in the electrical side and not in the mechnical side. Ex-tramway conductors have got to be trained before they could be taken as conductors in the City Transport.

"I shall now read the statement regarding the number of applications received from ex-tramway workers for appointment in the Transport department :—

Ex-tramway workers who applied	**859**
Ex-tramway workers who turned up for interview	**829**
Number of persons actually found fit for service in the Transport Department ..	**153**
Number of persons actually appointed ..	**35**
Checking inspectors	**2**
Driver	**1**
Fitters	**25**
Conductors	**7**

"I strongly refute the allegation made by the Deputy Leader of the Opposition that there was some discrimination in the matter of selection of candidates. The selection was made not at all on a communal or party consideration. There were only 33 vacancies available up to now. Forty-eight candidates were selected for appointment as conductors and were given training. Of these two did not come out successful in the training. Twenty-five candidates have so far been appointed as conductors. The remaining twenty-one are on the waiting list of probationers and when vacancies arise they will be appointed. It was intended that ex-tramway men should be employed against the additional staff required for the new buses put on the road. No less than thirty-five new buses were put on the road in the latter part of 1953–54. Although thirty-five additional buses were introduced, the ex-tramway drivers could not be appointed as bus drivers without the necessary endorsement on their licence. Though the fleet strength was augmented by the addition of thirty-five new buses, the number of vehicles on the reserve and sick list should also be taken into consideration in employing new men. The men selected and trained will be gradually absorbed. Very few temporary hands have been taken after the cessation of the tramway service. When some vehicles are on the sick list—now, there is vacation—there is no possibility of absorbing trained men all at 1 p.m.

[Sri B. Parameswaran] [11th May 1950

once. We cannot also send away experienced men for providing employment for the ex-tramway men. The Government are earnest and sincere in their endeavour to appoint as many ex-tramway workers as possible, and I hope they will have the co-operation of the Opposition."

MR. SPEAKER :—" The House will now adjourn and meet again at 8 a.m. to-morrow."

The House then adjourned.

V.—PAPER [a] LAID ON THE TABLE OF THE HOUSE.

Rules framed under the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952, *as extended to certain areas in Chidambaram and Cuddalore taluks of South Arcot district and issued in G.O. Ms. No.* 901, *Revenue, dated the 8th April* 1954. [*Laid on the table under section* 16 (2) *of the said Act.*]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[a] Laid on the table on the 10th May 1954.